மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 76/2022

பெயர் – சரவணக்குமார் (வா.சா.1)

நாள் – 23.08.2023

1,2 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் ராஜபாளையத்தில் குடியிருக்கிறேன். நான் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சொத்தில் பங்கு பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் சந்தையூரில் உள்ளது. தாவா சொத்துக்கான சர்வே எண் என்ன என்றால் சர்வேஎண்.231/1 ஆகும். பட்டா எண்.600 ஆகும். விஸ்தீர்ணம் 1 ஏக்கர் 79 செண்ட் ஆகும். அந்த சொத்து எனது தாத்தா வேலப்ப நாயக்கர் பெயரில் உள்ளது. தாவா சொத்து எனது தாத்தா வேலப்ப நாயக்கர் பெயரில் இருப்பதாக ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை எனது தாத்தாவின் அனுபவத்திற்கு பின்னிட்டு நாங்கள் கூட்டாகத்தான் அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்கள் இருந்ததா என்றால் இருந்தது. ஆனால் சிறிதளவே இருந்தது. எனது தாத்தாவுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் எனது தகப்பனாரையும் சேர்த்து 5 வாரிசுகள் ஆவார்கள். அவர்களுக்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் தாவா சொத்து எனது தகப்பனாருக்கு கிடைத்தது என்றால் சரிதான். எனது தகப்பனார் என்ன படித்துள்ளார் என்றால் படிக்கவில்லை. அவருக்கும் காதும் கேட்காது. எனது தகப்பனாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் என்னையும் சேர்த்து 3 பேர்கள் ஆவோம். தாவா சொத்து எனது அப்பாவையும் சேர்த்து எனக்கு 4ல் ஒரு பங்கு பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனாரிடம் நான் எனக்குரிய பங்கை கேட்டேனா என்றால் கேட்டேன். அப்போதுதான் எனது தகப்பனார் 4ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை எழுதிக்கொடுத்த விவரம் எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். அதனால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

7,8 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

எனது தகப்பனார் பெயர் என்ன என்றால் வி.ராமமூர்த்தி. சௌந்திரராஜன் எனக்கு

என்ன உறவு என்றால் தம்பி ஆவார். ராஜலட்சுமி எனது தங்கை ஆவார். எனது தகப்பனார் ராமமூர்த்தி என்பதற்கான ஆவணங்கள் ஏதோவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2,3 பிரதிவாதிகள் எனது தகப்பனாரான ராமமூர்த்தியின் மகன், மகள் என்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து எனக்கும், பிரதிவாதிகளுக்கும் பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அது எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது ஆகும். தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பட்டா எண்.600 யார் பெயரில் உள்ளது என்பதற்கான ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பட்டா எண்.600 எனது தாத்தா வேலப்ப நாயக்கர் பெயரில் உள்ளது. பட்டா எண்.600 எனது தாத்தா வேலப்பநாயக்கர் பெயரில் இருப்பதாக நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் உண்மையிலேயே எனது தாத்தா பெயரில் இருந்திருந்தால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் இல்லாத காரணத்தினால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1,4 பிரதிவாதிகள் மோசடியாக கிரைய ஆவணம் உருவாக்கியதாக சொல்லியுள்ள நிலையில் அந்த விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2020ம் ஆண்டு கடன் வாங்குவதற்காக வில்லங்க சான்றிதழ் பார்த்த போது தெரியவந்தது. அதுசம்பந்தமாக நான் என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மோசடி ஆவணம் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்காக சார்பதிவாளர் மற்றும் மாவட்ட பதிவாளரிடம் மனு கொடுத்தேனா என்றால் மனு கொடுத்தேன். என்று மனு கொடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் சொல்வது போல் எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றாலும் இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் வழக்கிற்காக உருவாக்கப்பட்ட ஆவணங்கள் என்றாலும் சரியல்ல. 7,8 பிரதிவாதிகள் இந்த வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக நான் சொத்து மதிப்பு வழிகாட்டுதல் ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

6 ம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

தபசில் சொத்து உப்பலூர் வேலப்பநாயக்கருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். உப்பலூர் வேலப்பநாயக்கரின் மகன் பெயர் ராமமூர்த்தி என்றால் சரிதான். தபசில் சொத்து ராமமூர்த்திக்கு பாத்தியப்பட்டு அவர் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். எனக்கு எந்த ஊர் என்றால் நான் இருப்பது ராஜபாளையம். எனது சொந்த ஊர் குலசேகரபுரம் ஆகும். ராமமூர்த்திக்கும் எனக்கு எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரிதான். தபசில் சொத்து ராமமூர்த்திக்கு பாத்தியப்பட்டு ராமமூர்த்தி தக்க மறுபயன் பெற்றுக்கொண்டு 28.11.2005 ம் தேதி அன்று பார்த்தீபன் என்பவருக்கு சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.5624/2005 ன் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் எனது தகப்பனாருக்கு படிப்பறிவும் கிடையாது காதும் கேட்காது. அவரை ஏமாற்றி பார்த்தீபன் வாங்கி விட்டார். எனது தகப்பனார் என் செய்கிறார் என்றால் 80 வயதாகிவிட்டதால் எதுவும் செய்யவில்லை. எனது அப்பா அம்மா இருவரும் குலசேகரபுரத்தில் உள்ளார்கள். ராமமூர்த்தி கிரையம் செய்து கொடுத்த சொத்தை பொறுத்து கேட்பதற்கு எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. தக்க மறுபயன் பெற்று பார்த்தீபன் என்பவர் 7.2.2007 ம் தேதி ஆவண எண்.840/2007 ன் படி 6 ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த கிரையம் செல்லாது என்று 2007 ஆண்டிலிருந்து 3 வருட காலத்திற்குள் எந்த ஒரு வழக்கும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த பத்திரங்களை செல்லாது எனகேட்பதற்கு எனக்கு உரிமை இல்லாத காரணத்தினால்தான் அவ்வாறு நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)